

ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், குட்டத்துப்பட்டியில் புனித பிரான்சிஸ் சேவியர் மேல்நிலைபள்ளியில் ரூ.50லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய வகுப்பறையை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் திறந்து வைத்தார். அருகில் பங்குத்தந்தை நெப்போலியன் ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவகுருசாமி, கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் சத்தியமூர்த்தி, மாவட்ட கவுன்சிலர் சுதாசெல்வி ஆரோக்கியமேரி, மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன் உட்பட தி.மு.க.நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட துல்கருணை சிக்கந்தர் நகரில் பல்வேறு திட்ட பணிகளுக்கு அமைச்சர் அர.சக்கரபாணி அடிக்கல் நாட்டி பேசினார்.

### ‘கலைஞர் செய்திகள்’ தொலைக்காட்சி சார்பில்

# ‘எல்லார்க்கும் ஆனவர்’ சிறப்பு வாழ்த்தரங்கம்!

## அமைச்சர் துரைமுருகன் தலைமையில் இன்று நடைபெறுகிறது!

சென்னை, பிப்.24-

கலைஞர் செய்திகள் தொலைக்காட்சி சார்பில் “எல்லார்க்கும் ஆனவர்” உணர்ச்சிகளால் ஒரு விழா நிகழ்ச்சி இன்று (24.2.2024 - சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு கலைஞர் அரங்கம் அண்ணா அறிவாலயத்தில் நடைபெறுகிறது.

மார்ச் 1 உடன்பிறப்புகளின் தலைவராய் உழைப்பால் உயர்ந்து - தமிழ்நாட்டின் முதலமைச்சராய் செயலால் உயர்ந்து - திராவிட மாடல் கோட்பாட்டு ஆட்சியை எல்லார்க்கும் சேர்த்து நடத்திக் காட்டி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள்.

உணர்ச்சியால் ஆன ஒரு விழாவாக கலைஞர் செய்திகள் தொலைக்காட்சி ஒருங்கிணைக்கிறது.

அனைவரையும் வருக வருக என கலைஞர் செய்திகள் தொலைக்காட்சி வரவேற்கிறது.

‘எல்லார்க்கும் ஆனவர்’ சிறப்பு வாழ்த்தரங்கத்தில் கழகப் பொதுச் செயலாளரும் நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் தலைமையுரையாற்றுகிறார்.

‘தாயுமானவர்’ என்ற தலைப்பில் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., ‘தலைவருமானவர்’ என்ற தலைப்பில் கம்பம் செல்வேந்திரன், ‘எதிர்காலத்துக்குமானவர்’ என்ற தலைப்பில் இயக்குநர் வெற்றிமாறன், ‘முதல்வருமானவர்’ என்ற தலைப்பில் பாரதி கிருஷ்ணகுமார், ‘தந்தையுமானவர்’ என்ற தலைப்பில் முனைவர் ம.எழிலரசி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

### தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில்

# அரசு கட்டிடங்கள் திறப்பு! மகளிரணி ஆலோசனைக் கூட்டம்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்கிறார்! அமைச்சர் கீதாஜீவன் வேண்டுகோள்!



தூத்துக்குடி, பிப்.24-

தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளரும் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. பிப்ரவரி 24, 25 தேதிகளில் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட தூத்துக்குடி, கோவில்பட்டி, விளாத்திகுளம் ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

அதன் விவரம் பின்வருமாறு:

**24.02.2024 - சனிக்கிழமை**

**விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி**

காலை 8.00 மணி - சிவ ஞானபுரம் - அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அடிக்கல் நாட்டு விழா.

காலை 8.30 மணி - மார்த்தாண்டம்பட்டி - தாய்சேய் துணை சுகாதார நிலையம் அடிக்கல் நாட்டுவிழா.

காலை 9.00 மணி - விளாத்திகுளம் - சார்பதிவாளர் கட்டிடம் அடிக்கல் நாட்டு விழா.

காலை 9.30 மணி - மந்திகுளம் - இலந்தைகுளம் நியாயவிலைக் கடை திறப்பு விழா, இலந்தைகுளம் சமுதாய நலக்கூடம் அடிக்கல் நாட்டு விழா.

காலை 10.00 மணி - விருசம்பட்டி - ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் இரண்டு வகுப்பறைகள் கட்டடம், பயணியர் நிழற்குடை, துணை சுகாதார நிலையம் திறப்பு விழா.

காலை 10.30 மணி - நெடுங்குளம் - பல்லாகுளம் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் இரண்டு வகுப்பறைகள் கட்டடம் திறப்பு விழா.

**தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி**

காலை 11.00 மணி - அபிராமி திருமண மண்டபம், தூத்துக்குடி - தூத்துக்குடி சட்டமன்ற தொகுதி தி.மு.க மகளிரணி, மகளிர் தொண்டரணி சார்பில் நடைபெறும் நாடாளுமன்ற தேர்தல் ஆலோசனைக் கூட்டம்

**25.02.2024-ஞாயிற்றுக்கிழமை**

மாலை 3.00 மணி - ஆர்த்தி மஹால், கோவில்பட்டி - கோவில்பட்டி சட்டமன்ற தொகுதி தி.மு.க மகளிரணி, மகளிர் தொண்டரணி சார்பில் நடைபெறும் நாடாளுமன்ற தேர்தல் ஆலோசனைக் கூட்டம்.

மேற்படி நிகழ்ச்சிகளில் அந்தந்த தொகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகள், மகளிரணி, மகளிர் தொண்டரணியின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற மகளிர் பிரதிநிதிகள், மகளிரணி பெண்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று பெருந்திரளாக கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கீதாஜீவன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### ஒட்டன்சத்திரம் பகுதிகளில்

# கூட்டுக் குடிநீர் திட்ட பணிகள் ஆகஸ்ட் மாதத்தில் முடிவடையும்

## அமைச்சர் அர. சக்கரபாணி தகவல்!

ஒட்டன்சத்திரம், பிப்.24-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சிப் பகுதிகளில் ரூ.10.78 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி பேசியதாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்துஅந்த திட்டங்களின் பயன்கள் கடைக்கோடி கிராமங்களில் வசிக்கும் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையும் வகையில் செயல்படுத்தி வருகிறார்கள்.

முதலமைச்சர் அடுக்கு மாடி கட்டடம் கட்டுவதற்காக ஒட்டன்சத்திரத்தில் 480 வீடும், கீரனூரில் 430 வீடும் கட்டுவதற்காக அனுமதி வழங்கியுள்ளார்கள். ஒட்டன்சத்திரம் பகுதியில் 3 கல்லூரிகள் தொடங்கப் பட்டுள்ளன. அம்பிளிக்கையில் பெண்கள் மட்டும் படிக்கும் கல்லூரி அமைக்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் ஒட்டன்சத்திரத்தில் கல்லூரி கட்டிடம் கட்டுவதற்கு ரூ.25.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விருப்பாட்சியில் தொழிற்பயிற்சி நிலையம் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. படித்து முடித்த பிறகு போட்டி தேர்வுக்கான பயிற்சி மையம் காளாஞ்சிபட்டியில் ரூ.10.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. இந்த மையத்தினை முதலமைச்சர் விரைவில் திறந்து வைக்க உள்ளார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்ற பின்பு பொருளாதாரத்தில் வாழ்வாதாரத்தினை இழந்த மக்களுக்கு முதல் கையெழுத்திட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.4000 உதவித்தொகை வழங்கினார். பெண்களுக்கு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லா பயணச்சலுகை வழங்கப்பட்டுள்ளது. இது வரை 440 கோடி பெண்கள் கட்டணமில்லா பேருந்து பயணத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர். குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் 1.15 கோடி பெண்கள் பயனடைந்து வருகின்றனர்.

ஒட்டன்சத்திரம் பகுதி மக்களுக்கு குடிநீர் பிரச்சனையை தீர்த்து வைப்பதற்கு ரூ.1000 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது. ஒரு நபருக்கு தினமும் 135 லிட்டர் குடிநீர் வழங்க திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஆகஸ்ட் மாதத்திற்குள் முடிவடையும் ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகள் தரம் பிரித்து உரம் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

ஒட்டன்சத்திரத்தில் அரசு மருத்துவமனை அனைத்து வசதிகளுடன் கூடிய மருத்துவமனையாக ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. லெக்கையன்கோட்டையிலிருந்து பழனி வரை நான்கு வழிச் சாலையில் மின்விளக்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலமைச்சர் சட்டமன்றத்தில், விபத்தில் சிக்கி தனியார் மருத்துவமனைக்கு சென்றால் அவர்களுக்கு முதற்கட்ட சிகிச்சைக்காக வழங்கப்பட்ட ரூ.1 இலட்சத்தினை உயர்த்தப்பட்டு தற்போது ரூ.2 இலட்சமாக வழங்கப்படும் என அறிவித்துள்ளார்கள். பெண்கள் உயர் கல்வி படிப்பதற்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசு பள்ளியில் ஆண்கள் 6 முதல் 12ம் வகுப்பு வரை படித்து உயர்கல்விக்கு சென்றால் அவர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் தமிழ்புதல்வன் திட்டத்திற்கு ரூ.350.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசு பள்ளியில் காலை சிற்றுண்டி திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. தற்போது அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் கொண்டு வரப்படவுள்ளது. ஏழை குடும்பங்களை சார்ந்த 5 இலட்சம் குடும்பங்களை கண்டறிந்து அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பல்வேறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்தால் தகுதியுள்ளவர்களுக்கு 15 நாட்களில் குடும்ப அட்டை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மக்களுக்கு தரமான அரிசி வழங்க பல்வேறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது பொதுமக்களுக்கு தரமான அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட நாகணம்பட்டி பெரியாஞ்செட்டிபட்டியில் 5 பணிகள் ரூ.1.44 கோடி மதிப்பீட்டிலும், வார்டு 11 மற்றும் 12 ஆகிய பகுதிகளில் 6 பணிகள் ரூ.1.18 கோடி மதிப்பீட்டிலும்,10வது வார்டு பகுதியில் 4 பணிகள் ரூ.6.52 கோடி மதிப்பீட்டிலும், வார்டு 15, 16, 17 மற்றும் 18 ஆகிய பகுதிகளில் 8 பணிகள் ரூ.1.13 கோடி மதிப்பீட்டிலும், 14வது வார்டு பகுதியில் 3 பணிகள் ரூ.42.20 இலட்சம் மதிப்பீட்டிலும், வார்டு 7, 9 மற்றும் 13 ஆகிய பகுதிகளில் 13 பணிகள் .2.35 கோடி மதிப்பீட்டிலும், வார்டு 1. 4, 5, 6 மற்றும் 8 ஆகிய பகுதிகளில் 16 பணிகள் ரூ.2.62 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் 55 பணிகள் ரூ.10.78 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன. முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்ற பின்னர் சொன்ன வாக்குறுதிகள் மட்டுமல்லாமல் சொல்லாத வாக்குறுதிகளையும் நிறைவேற்றி பொற்கால ஆட்சியை நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு நீங்கள் என்றென்றும் உறுதுணையாக இருக்க வேண்டும்என பேசினார்.

இந்நிகழ்ச்சியில் திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி, நகர செயலாளர் வெள்ளைச்சாமி, மாவட்ட அவைத் தலைவர்மோகன், நகர்மன்றதலைவர் திருமலைச்சாமி, செயற்குழு உறுப்பினர் கண்ணன், பொதுக்குழு உறுப்பினர்பாலு, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாண்டியராஜன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

7-ஆம் பக்கத் தொடர்ச்சி!

**மிக முக்கியமான தேர்தல்**

மாநாட்டின் வெற்றி 50 சதவிகிதம்தான். மீதமுள்ள 50 சதவிகிதம் வெற்றி என்பது வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் நாம் 40க்கு 40 கண்டிப்பாக ஜெயித்தாக வேண்டும். அப்பொழுதுதான் மாநாடு 100 சதவிகித வெற்றியை அடையும். இந்தத் தேர்தல் ஏதோ ஒரு சாதாரண தேர்தல் கிடையாது. பிரதமரைத் தேர்ந்தெடுக்கினற தேர்தல் என்று நாம் அலட்சியமாக இருந்திடக்கூடாது.

தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்க, இந்திய ஒன்றியத்தைக் காப்பாற்றுவதற்கான மிக, மிக முக்கியமான தேர்தல். நமக்குச் சாதகமான ஒரு ஒன்றிய அரசு அமைந்தால்தான் நம் நாட்டுக்கும், நம் தமிழ்நாட்டு மக்களுக்கும் ஒரு விடிவு காலம் பிறக்கும். நம் உரிமைகளை மீட்க முடியும். அதன் மூலம் 2026இல் மீண்டும் நாம் ஆட்சி பெறுவதை மீண்டும் நாம் உறுதி செய்தாக வேண்டும்.

கடந்த வாரம் 16ஆம் தேதி, 17ஆம் தேதி, 18ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் மக்களவைத் தொகுதி வாரியாக உரிமைகளை மீட்க தலைவரின் குரல் எனப் பிரச்சாரப் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. அந்தக் கூட்டங்களையே மிகப்பெரிய ஒரு மாநாடு போல் நடத்தி காட்டிய உங்கள் அனைவருக்கும் மீண்டும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மனக்கசப்புகளை விடுப்பீர்!**

நாம் எல்லோரும் சேர்ந்து உழைக்க வேண்டும். கருத்து வேறுபாடுகள் மனக்கசப்புகள் மனமாச்சரியங்களை விடுத்து நாம் அடுத்து வருகின்ற நாட்களில் ஒற்றுமையோடு செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். இளைஞர் அணி நிர்வாகிகள் அந்தந்த மாவட்டங்களில் நீங்க சொல்கின்ற தேர்தல் பணிகளை மேற்கொள்ளத் தயாராகக் களத்தில் இருக்கின்றார்கள். அவர்களை நீங்கள் நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள், வழிநடத்துங்கள்.

இன்னொரு முக்கியமான வேண்டுகோள் இல்லந்தோறும் இளைஞர் அணியை இன்னும் வேகம் எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். இளைஞர் அணி நிர்வாகிகள் உங்களை வந்து சந்தித்து அதற்கான பணிகளை நான் ஈடுபட அவர்களை அறிவுறுத்திருக்கின்றேன். டார்கெட் எதுவும் கிடையாது இலக்குக் கிடையாது. தமிழ்நாட்டின் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று ஏறி, இறங்கி இளைஞர் அணி உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும் என்பது மட்டும்தான் ஒரே டார்கெட்.

முத்தமிழறிஞர் கலைஞரின் வளர்ப்புகள் நாம். கழகத் தலைவரின் வழித்தோன்றல் நாம். ஆகவே நாடும் நமதே நாற்பதும் நமதே என்கிற வகையில், வருகின்ற நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியை நம் தலைவரின் கரங்களில் நாம் சமர்ப்பிக்க வேண்டும். 2021இல் அடிமைகளை வீழ்த்தி, தமிழ்நாட்டுக்கு நம் முதலமைச்சர் அவர்கள் விடியலைத் தந்தார்கள். இப்போது வருகின்ற இந்தத் தேர்தலில் அடிமைகளை விரட்டுவோம்.

2024ஆம் ஆண்டுத் தேர்தலில், வருகின்ற இந்தத் தேர்தலில் அடிமைகளின் முதலாளிகள் ஓனர்ஸ், ஏஜென்சியையும் பாசிஸ்ட்டுகளையும் வீழ்த்தி, ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் நாம் தான் தரவுள்ளோம். பாசிசம் வீழட்டும் இந்தியா வெல்லட்டும்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதிஸ்டாலின் பேசினார்.

**நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள்**

இந்த நிகழ்ச்சியில் பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழகத்தின் முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி, பொன்முடி,

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், கனிமொழி கருணாநிதி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ்.இளங்கோவன், இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் தாயகம் கவி, ஆஸ்டின், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன்,

இளைஞர் அணியின் துணைச் செயலாளர்கள் ஜோயல், இன்பா.ரகு, இளையராஜா, மாலிக், பிரகாஷ், பிரபு, ஜி.பி.ராஜா, சீனிவாசன், ஆனந்தகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் எபினேசர், பிரபாகர் ராஜா, பிரகாஷ், ராஜா அன்பழகன், லோகேஷ் ஆர்.டி.மதன்குமார்

உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு அரசின் துரித நடவடிக்கையால்

# சவுதி அரேபியாவில் சிக்கித் தவித்த தமிழ்நாட்டு மீனவர்கள் 11 பேர் தாயகம் திரும்பினர்!

## அமைச்சர்கள் செஞ்சி மஸ்தான்- மனோ தங்கராஜ் வரவேற்றனர்!

சென்னை, பிப்.24-

கன்னியாகுமரியை சேர்ந்த 9 பேர், இராமநாதபுரத்தைச் சேர்ந்த 2 பேர் என்று தமிழ்நாட்டு மீனவர்கள் சவுதி அரேபியா தம்மாமில் சிக்கித்தவித்தனர். இந்த 11 பேரின் குடும்பத்தி னரும் தமிழ்நாடு அரசு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் அவர்களை சவுதி அரேபியாவில் இருந்து தமிழ்நாட்டிற்கு மீட்டு வர நடவடிக்கை எடுக்கும் படி கோரிக்கை விடுத்தனர்.

அவர்களின் கோரிக்கையை பரிவுடன் கேட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமைச்சர்கள் செஞ்சி மஸ்தான், மனோ தங்கராஜ் ஆகியோரை இது குறித்து நடவடிக்கை எடுக்கும் படி உத்தரவிட்டார். அதன் அடிப்படையில் அமைச்சர்கள் செஞ்சி மஸ்தான், மனோ தங்கராஜ், கழக அயலக அணிச் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா எம்.பி, மற்றும் டாக்டர் கலா நிதி வீராசாமி எம்.பி. ஆகியோர் ஆலோசனையின் பேரில் சவுதி அரேபிய கழக அயலக அணி நிர்வாகிகள் மயிலாடுதுறை வெங்கடேசன், திருச்சி ஆரிஃப் மக்பூல் ஆகியோர் இந்தய தூதரகம் உதவியுடன், சவுதி அரசாங்கத்தின் முழு ஒத்துழைப்புடன் இவர்களை சட்டபூர்வமாக அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொண்டு 21.2.2024 அன்று சவுதியில் இருந்து சென்னைக்கு அழைத்து வரப்பட்டனர்.

தமிழ்நாட்டிற்குத் திரும்பிய 11 மீனவர்களையும் அமைச்சர்கள் செஞ்சி மஸ்தான், மனோ தங்கராஜ் ஆகியோர் வரவேற்று அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

சென்னை திரும்பிய 11 மீனவர்கள் தமிழ்நாடு அரசுக்கும், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டதுடன் இதற்காக பெரும் முயற்சி மேற்கொண்ட அமைச்சர்கள் செஞ்சி மஸ்தான்,மனோ தங்கராஜ் மற்றும் அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா, டாக்டர் கலாநிதி வீராசாமி அதுமட்டுமல்லாமல் கழக அயலக அணி சவுதி அரேபிய நிர்வாகிகள் மயிலாடுதுறை வெங்கடேசன், திருச்சிஆரிஃப் மகவூர், முகவை சுனி முகம்மது, துறையூர் கமால் பாட்சா உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

மேலும் இந்த 11 மீனவர்களையும் மீட்பதற்காக கன்னியாகுமரி மாவட்ட அயலக அணி பொறுப்பாளர் பாலுார் தேவா வழக்கு சம்பந்தப்பட்ட நிகழ்வுகளையும் பார்த்துக் கொண்டார்.

மேலும் சவுதி அரேபியாவில் இருந்து சென்னை திரும்பிய 11 மீனவர்களும் கன்னியா குமரி, இராமநாதபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

### கழக துணைப் பொதுச் செயலாளர் - அமைச்சர் இ.பெரியசாமி சிறப்புரை!

# திண்டுக்கல் கிழக்கு - மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் அர.சக்கரபாணி - ஐ.பி.செந்தில் குமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!





திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாளை (25.02.2024 - ஞாயிற்றுக் கிழமை), பகல் 12.00 மணியளவில் கழக துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான இ.பெரியசாமி அவர்கள் சிறப்புரையாற்ற, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் மூ.காமாட்சி மற்றும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட அவைத்தலைவர் தி.மோகன் ஆகியோரின் தலைமையில் திண்டுக்கல் மாவட்ட தி.மு.க. அலுவலகமான “கலைஞர் மாளிகையில்” நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகரச் செயலாளர் மற்றும் நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் பகுதி கழகச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: முதல்வர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள்
2024 நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் சம்பந்தமாக.
கழக ஆக்கப் பணிகள்.

| | |
|---|---|
| **அமைச்சர் அர.சக்கரபாணி** | **இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ.** |
| செயலாளர் | செயலாளர் |
| திண்டுக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. | திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. |



தமிழ்நாட்டு மீனவர்கள் 11 பேர் சவுதி அரேபியாவில் சிக்கிக் கொண்டதைத் தொடர்ந்து அவர்கள் அனைவரும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் துரித நடவடிக்கையால் சென்னை திரும்பினர். அவர்களை அமைச்சர்கள் செஞ்சி மஸ்தான், மனோ தங்கராஜ் ஆகியோர் வரவேற்றனர். உடன் 11 மீனவர்களையும் அழைத்து வந்த சவுதி அரேபிய கழக அயலக அணி நிர்வாகிகள் மயிலாடுதுறை வெங்கடேசன், திருச்சி ஆரிஃப் மக்பூல் ஆகியோர் உடனுள்ளனர்.